**17.04.2025**

**MCOP.No.20/2017**

**ம.சா.1 : சுனிதா**

**<u>3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

1) விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. விபத்து எப்போது எத்தனை மணி என்பது போன்ற விவரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. என் கணவரின் தம்பி எனக்கு போன் செய்து விபத்து பற்றி விவரத்தை தெரிவித்தார். விபத்து பற்றி யார் புகார் கொடுத்தார் என்றால் என் கணவரின் தம்பி தான் புகார் கொடுத்தார். விபத்தில் என் கணவர் இறக்கும் போது 55 வயது என்றால் சரியல்ல. 50 வயது தான்.

2) என் கணவர் கள்ளக்குறிச்சி கூட்டுறவு சக்கரை ஆலையில் கேன் ஆபிசராக வேலை பார்த்தார் என்றால் சரிதான். அவருடைய அடையாள அட்டை என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் என் கணவரின் பிறப்பு தேதி 31.01.1961 என்று உள்ளது என்றால் சரிதான். அது **எ.மா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த ஆவணத்தின் படி என் கணவரின் வயது 55 என்றால் சரிதான்.

3) என் முன் விசாரணையில் 3 வது மற்றும் 5 வது பாராவில் என் கணவரின் வயது 50 என்று சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. விபத்தில் இறந்த சோலைமுத்துவின் 2 வது மனைவி தான் நான் என்பதற்கான ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் கணவருக்கு முதல் மனைவி உள்ளார் என்றால் அவர் விவாகரத்து பெற்றுவிட்டார். அவ்வாறு அவர் விவாகரத்து செய்ததற்கான ஆதாரத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4) அதே போல் என் கணவரின் வாரிசு சான்றிதழில் முதல் மனைவி, குழந்தைகள் போன்ற விவரங்கள் தாக்கல் செய்யவில்லை. தற்போது தான் விண்ணப்பித்துள்ளேன். 17.05.2016 விபத்து நடந்து 18.05.2016 அன்று அவர் இறந்துவிட்டார். அதற்கு தற்போது வரைக்கும் எந்த வித வாரிசு சான்றிதழலும் தாக்கல் செய்யவில்லை என்று

சொன்னால் என்றால் சரிதான். மனு செய்துள்ளேன். இது நாள் வரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

5) நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.5 இறப்பு சான்றிதழில் வாரிசுகள் யார் என்ன போன்ற விவரங்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி இறப்பு சான்றிதழை என் கணவரின் தம்பி தான் வாங்கினார். IA 575/2022 என்ற இடைநிலை மனுவை வாரிசு சேர்க்க சொல்லி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த மனுவில் மனுதாரர் தரப்பில் காலம் சென்ற விவாகரத்தான முதல் மனைவியின் மகன் சிவராமசந்திரன் என்பவரை மனுவில் தரப்பினராக சேர்க்க வேண்டி தாக்கல் செய்யப்பட்டு அந்த மனு 14.12.2023 ல் அனுமதிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6) முதல் மனைவி சட்டப்படி விவாகரத்து செய்யப்பட்டார் என்றும், நான் சட்டப்படி எவ்வாறு 2 வது மனைவியாக வந்தேன் என்பதற்கான ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் முன் விசாரணையில் சேலம் மாவட்டம், ஆத்தூர்வட்டம், காட்டுக்கொட்டை சாலையம்மன் நகரில் தான் குடியிருப்பதாக போட்டுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள ஆதார் கார்டில் என் விலாசம் இடைசேரி, காயப்பனிசி, கோலிகோடு, கேரளம் என்று போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆதார் அட்டை நகல் **எ.ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7) எனக்கு இறந்து போன சோலைமுத்துவிற்கும் எப்போது, எங்கு திருமணம் நடைபெற்றது, போன்ற விவரத்தை தெரிவிக்க ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதே போல் என் முன் விசாரணையில் சொல்லியுள்ள முகவரிக்கும், என்னுடைய ஆதார் அட்டையில் உள்ள முகவரிக்கும் வேறு பாடு உள்ளது என்றும், வேறு மாநில விலாசம் உள்ளது என்றால் சரிதான். நான் தற்போது சிறுச்சூரில் குடியிருந்து வருகிறேன்.

8) எனக்கு இறந்து போன சோலைமுத்துவிற்கும் எப்போது, எங்கு, எந்த தேதியில் திருமணம் நடைபெற்றது, போன்ற விவரத்தை தெரிவிக்க ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த மனுவில் இறந்து போன சோலைமுத்துவின் சட்டப்படியான வாரிசு தான் நான் என்பதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

9) அதனால் இறந்து போன சோலைமுத்துவிற்கு நான் வாரிசு என்று சொல்வதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யாத நிலையில் அவருடைய இறப்பிற்கு நஷ்டயீடு கோர எனக்கு சட்டப்படி உரிமை இல்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.6 ல் என் கணவர் இரு சக்கர வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று செக் ரிப்போர்ட் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே இறந்து போன நபருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

10) நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.13 ஆவணத்திலும் என் கணவர் வேலை செய்தற்கான நிறுவனத்தன் அதிகாரின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். என் முன் விசாரணையின் 3 வது பத்தியில் பதவி உயர்வு, வளர்ச்சி அலுவலர் என்று சொல்லியுள்ளதற்கு எந்தவித ஆதாரமும் தாக்கல் செய்யவில்லை எனறால் சரிதான். அவர் வேலையில் இருந்தற்கான எந்தவித ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை எனறால் சரிதான்.

11) நான் அதிக நஷ்டயீடு பெற வேண்டும் என்ற எண்ணத்தில் மிகைப்படுத்தி ஆவணம் இல்லாமல் கோரியுள்ளேன் என்றால் சரியல்ல. முதல் மனைவி தற்போதும் உயிருடன் தான் உள்ளார். அவர் விவாகரத்து பெற்றுவிட்டார். என் முன் விசாரணையில் மேற்படி முதல் மனைவி நஷ்டயீடு கோர மாட்டார் என்றும், அவர் நீதிமன்றத்திற்கு வரமாட்டார் என்பதற்கும் நான் எவ்வித ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை

என்றால் சரிதான். நஷ்டயீடு மனுவில் முதல் மனைவியும், அவருடைய வாரிசுயும் எவ்வித இழப்பீடும் கோர மாட்டோம் என்பதற்காக எந்தவித ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

12) என் கணவர் குறிஞ்சி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்பதற்கான மருத்துவ பில்கள் எதுவும் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சேலம் மருத்துவமனையில் ஆம்புலென்ஸ்சில் எடுத்து சென்றதற்கான பில்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். என் கணவருக்கு அறுவை சிகிச்சை செய்தற்காகவும், தீவிர சிகிச்சை செய்தற்காகவும் பாரா 5ல் சொல்லியுள்ளதற்கு மருத்துவ பில்கள் எதுவும்  தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

13) என் முன் விசாரணையில் ராஜன் பிரதர்ஸ் வாகனம் முன் புறம் மோதி  விபத்து ஏற்பட்டதாக சொல்லி, முதல் தகவல் அறிக்கையில் வாகனத்தின் பின் பக்கம் மோதியதாக சொல்லப்பட்டுள்ளநிலையில் அது முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.6ல் இரு சக்கரத்தின் முன் பக்கம் தான் சேதாரம் ஆனதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். உண்மையில் என் கணவர் தான் பேருந்தை ஓவர் டேக் செய்தது தான் விபத்திற்கு காரணம் என்றால் சரியல்ல. அதனால் தான் இரு சக்கர வாகனத்தின் முன் பகுதி அடிப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

14) விபத்திற்கு என் கணவரின் கவனக்குறைவு தான் 50% காரணம் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிண கூராய்வு அறிக்கையிலும் விபத்தினால் தலையில் ஏற்பட்ட காயத்தினால் இறப்பு என்று தான் உள்ளது. விபத்து சமயத்தில் என் கணவர் தலைகவசம் அணியவில்லை என்பதால் தான் விபத்திற்கு என் கணவர் தான் காரணம் தான் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் என் கணவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை, தலைகவசம் அணியவில்லை, மேறப்டி இரு சக்கர வாகனத்திற்கு

காப்பீடு இல்லை என்பதால் 3ம் எதிர்மனுதாரர் எந்தவித இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாருக்கு எதிராக இந்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

15) என் கணவர் தினமும் சிறுவாச்சூரில் இருந்து சங்கராபுரம் அலுவலகம் சென்றுவருவார். நான் இந்த மனுவில் 2ம் மனுதாரர் மைனர் சிவபிரியாவுக்கு வயது 13 என்று விபத்து சமயம் போட்டுள்ளேன். அவர்தற் சமயம் மேஜர் ஆகிவிட்டதால் மனுவை திருத்தம் செய்யாமல் வழக்கை நடத்திவருவது ஏற்றுக்கொள்ள தக்கது அல்ல என்றால் சரியல்ல. மேலும் அவரின் வயதை நிறுபிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அதே போல் 2,3 மனுதாரர்கள் இறந்து போன சோலைமுத்துவின் வாரிசுகள் தான் என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

16) என்னிடம் காட்டப்படும் ஆதார் அட்டையில் சிவ பிரியாவின் அப்பா பெயர் இல்லை. 2ம் மனுதாரரின் பிறந்த தேதி 21.05.2004 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அது எ.மா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சிவபிரியாவின் முகவரி சிறுவாச்சூர் என்று குறிப்பிடப்படவில்லை. 3ம் மனுதாரர் மருத்துவம் படிப்பதற்கான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

17) நான் இதுவரை இளவர்களுக்கான மனுவை திருத்தம் செய்யாமல் அவர்கள் படிக்கிறார்கள் என்பதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள இழப்பீடு மனு, பிரமாண வாக்குமூலம் போன்றவற்றை முறையான விவரங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. 2ம் மனுதாரர் எம்.எஸ்.சி திருவாரூரில் படித்து வருகிறார். நான் பல்வேறு தலைப்புகளின் கீழ் கோரியுள்ள இழப்பீடுகள் மிக அதிகம் என்பதால் இந்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

18) விபத்து சமயம் முறையான ஓட்டுநர் உரிமம் இல்லாமல், காப்பீட்டு விதிமுறைக்கு மீறி கவனக்குறைவாக என் கணவர் வாகனத்தை ஓட்டி விபத்தை ஏற்படுத்துள்ளதால் விபத்திற்கு என் கணவர் தான் காரணம் என்றால் சரியல்ல. கடந்த 21.03.2019 ல் பதிலுரை தாக்கல் செய்தும், உரிய ஆவணம் தாக்கல் செய்யாத காரணத்தினால் இந்த கால இடைவெளிக்கு 3ம் எதிர்மனுதாரர் வட்டி தொகை கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

19) மேற்படி 6 வருடத்திற்கான கால தாமதம் மனுதாரருடைய கால தாமதம் என்பதால் 3ம் எதிர்மனுதாரர் வட்டி தொகை கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் என் கணவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை, தலைகவசம் அணியவில்லை, மேறப்டி இரு சக்கர வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்பதால் 3ம் எதிர்மனுதாரர் எந்தவித இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாருக்கு எதிராக இந்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S Digitally signed by GANESAN S Date: 2025.04.17 18:46:15 +0530

**Accidents Claim Tribunal, Attur.**